# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.52/2022** **நாள் : 21.09.2022**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் உள்ள 200 பணிமனை எல்லைகளை சீரமைத்து மறுவரையறை மாற்றங்கள் 01.10.2022 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிறது.**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

தமிழகத்தில் உள்ளாட்சிகளின் வார்டுகளை 2011ஆம் ஆண்டின் மக்கள்தொகை அடிப்படையாக கொண்டு, மறுவரையறை செய்வதற்காக மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி சென்னை மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் எண்ணிக்கையில் மாற்றமின்றி மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை மாநகராட்சி அவ்வாறு மறுவரையறை செய்த வார்டுகளின் விவரங்களை அரசிதழ் எண்.408, எண்.VI (2)/160(a-3)/2018 நாள் 14.12.2018 ல் வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் சென்னை குடிநீர் வாரியமும் பணிமனை எல்லைகளை சீரமைத்து மறுவரையறை மாற்றங்களை 01.10.2022 முதல் நடைமுறை க்கு கொண்டு வருகிறது.

மேற்கண்ட சீரமைப்பின் மூலம் நுகர்வோர்கள் எவ்வித குழப்பமின்றி தங்கள் பகுதிக்குரிய பணிமனைகளை அணுகி தங்களுக்கான சேவைகளை பெற்றுக்கொள்ளலாம். மேலும், இவ்வாறு மறுவரையறை செய்வதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைக் குடிநீர் வாரிய களப்பணியாற்றும் அலுவலர்கள் சிறந்த முறையில் பணிகளை கண்காணிக்கவும் ஒருங்கிணைந்து செயல்படவும் வழிவகுக்கும்.

நுகர்வோர்கள் தங்களது நுகர்வோர் அட்டை எண்களின் விவரங்களை வைத்து திருத்திய பணிமனை விவரங்களை சென்னை குடிநீர் வாரிய இணையதளத்தின் முகவரி https://bnc.chennaimetrowater.in/#/public/find-my-new-ward -யில் சரிப்பார்த்துக் கொள்ளலாம்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்**
**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்**
**கழிவுநீரகற்று வாரியம்**